# திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

**பிறப்பிப்பவர்: முனைவர்.ச.விசாகன், இ.ஆ.ப.,**

ந.க.எண்:9056/2014/ஊ.வ.1 நாள்: 21.06.2022

பொருள் : பணியமைப்பு - ஊரக வளர்ச்சி அலகு - திண்டுக்கல் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி IV 2007-08 & 2012-13 - ல் தட்டச்சர்கள் தேர்வு செய்யப்பட்டது - திருமதி.வீ.மகேஸ்வரி என்பவர் பழங்குடியினர் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டது - ஜாதி சான்றிதழை சரிபார்த்து மாநில அளவிலான கூர்ந்தாய்வுக் குழுவின் (State Level Scrutiny Committee) உண்மைத் தன்மை அறிக்கை வரப்பெற்றது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

பார்வை :

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடித ந.க.எண்:711/PSD-A4/2012, நாள்:02.03.2013.
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 1844 / 2013/ஊ.வ.1, நாள்:09.04.2013.
3. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்: 9056/2014/ ஊ.வ.1, நாள்:02.05.2019 மற்றும் தொடர் நடவடிக்கைகள்.
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய துணைச் செயலாளர் அவர்களின் கடித ந.க.எண்:711/PSD-A2/2013, நாள்:02.07.2019 மற்றும் தொடர் நடவடிக்கைகள்.
5. தமிழ்நாடு மாநில அளவிலான கூர்நோக்கு குழு -II தலைவர் மற்றும் கூடுதல் செயலர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்: 16800/CV -3(1)/2008-20, நாள்:10.05.2022.

************

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடித்தின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி IV 2007-08 & 2012-13 - ல் பழங்குடியினர் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் திருமதி.வீ.மகேஸ்வரி என்பவரை ஜாதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டிற்கான நிபந்தனைகளுடன் திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு தட்டச்சராக ஒதுக்கீடு செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டது.

அதனடிப்படையில் பார்வை 2-ல் காணும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி தனியருக்கு பார்வை 1-ல் காணும் கடித்தில் தெரிவிக்கப்பட்ட ஜாதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டிற்கான கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இம்மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், தட்டச்சராக பணி நியமனம் வழங்கப்பட்டு, 17.04.2013 முற்பகல் முதல் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார்.

- பணி நியமனம் மாநில அளவிலான கூர்ந்தாய்வுக் குழுவின் (State Level Scrutiny Committee) ஜாதி குறித்த உண்மைத் தன்மை சரிபார்ப்புக்கு உட்பட்டது.
- மாநில அளவிலான கூர்ந்தாய்வுக் குழுவின் (State Level Scrutiny Committee) ஜாதி உண்மைத் தன்மை சரிபார்ப்புச் சான்று பெறப்பட்ட பின்னரே பணி வரன்முறை செய்யப்படும்.
- ஜாதி குறித்த தேர்வாளரின் கோரிக்கை உண்மையில்லை என மாநில அளவிலான கூர்ந்தாய்வுக் குழுவின் (State Level Scrutiny Committee) அறிக்கையின் மூலம் பின்னர் தெரிய வந்தால், உடனடியாக பணி நீக்கம் செய்யப்படுவதுடன் ஊதிய பிடித்தம் உள்ளிட்ட சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, மேற்கண்ட நிபந்தனைகளின்படி தனியரது சாதி சான்றிதழின் ஒளிம நகல், சாதி உண்மைத் தன்மை சரிபார்ப்புச் சான்று பெறும் பொருட்டு மாநில அளவிலான கூர்ந்தாய்வுக் குழுவிற்கு (State Level Scrutiny Committee) பார்வை 3-இன்படி அனுப்பப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, தட்டச்சர் திருமதி.வீ.மகேஸ்வரி என்பவரது ஜாதி சான்றிதழ் மெய்த்தன்மை குறித்த அறிக்கை, பார்வை 5-இல் காணும் தமிழ்நாடு மாநில அளவிலான கூர்ந்தாய்வுக் குழுவின் (State Level Scrutiny Committee) செயல்முறை ஆணையின்படி வரப்பெற்றுள்ளது. அதில் தனியரது ஜாதி சான்றிதழ் மெய்த்தன்மை குறித்து கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

*"19. The State Level Scrutiny Committee after careful and independent examination of the available records/documents of Tmt.V.Maheswari, D/o. Thiru S.Veerappan the report of the Revenue Divisional Officer, Periyakulam, the report of the Deputy Superintendent of Police, Social Justice and Human Rights Wing, SC/ST Vigilance Cell, Theni and the views of the Anthropologist conclude that Tmt. V.Maheswari, D/o.Thiru.S.Veerappan belongs to "Kattunayakan" Scheduled Tribe Community. Accordingly, the State Level Scrutiny Committee hereby* ***confirms that the "Kattunayakan" Scheduled Tribe Community Certificate No.2674327 issued by the Sub Collector, Periyakulam on 05.07.1996 to Tmt.V. Maheswari, D/o. Thiru S.Veerapan is correct."***

மேற்படி, தனியருக்கு பெரியகுளம் சார் ஆட்சியரால் வழங்கப்பட்ட ”பழங்குடி காட்டு நாயக்கன்” சாதி சான்றிதழ் எண்:2674327” மெய்த்தன்மை சரியானது எனத் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், தனியர் இம்மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாளான 17.04.2013 முற்பகல் தட்டச்சர் பணி நிலையில் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

21/06/2022

மாவட்ட ஆட்சியருக்காக,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
திண்டுக்கல்.

21/6/22

பெறுநர் :-

தொடர்புடையவர் (உரிய வழிமுறையாக)

- சார்வு செய்து சார்வு நகல் அனுப்பி வைத்திட.

நகல் :- 1 ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.
3. கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திண்டுக்கல்.
4. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர், தணிக்கை, திண்டுக்கல்.
5. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ), ஊராட்சி ஒன்றியம், ரெட்டியார்சத்திரம்.
6. ஊ.வ.1 இருப்பு கோப்பிற்கு.